செ.வெ.எண்: 549 நாள்: 3.9.2020

**புதுக்கோட்டை பார்ஸ்டல்பள்ளி மற்றும் மாவட்டசிறையில் காலியாக உள்ள சிப்ப எழுத்தர் (Packer Clerk) பணியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம்.**

**புதுக்கோட்டை மாவட்டச்சிறை கண்காணிப்பாளர் திருமதி.வி.ருக்மணிபிரியதர்ஷினி அவர்கள் தகவல்.**

-----------------------------------------------------------------------------------------------------------

புதுக்கோட்டை பார்ஸ்டல்பள்ளி மற்றும் மாவட்டசிறையில் காலியாக உள்ள சிப்ப எழுத்தர் (Packer Clerk) பணியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம். இதுகுறித்து புதுக்கோட்டை மாவட்டச்சிறை கண்காணிப்பாளர் திருமதி.வி.ருக்மணிபிரியதர்ஷினி அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை பார்ஸ்டல்பள்ளி மற்றும் மாவட்டசிறையில் காலியாக உள்ள சிப்ப எழுத்தர் (Packer Clerk) ஒரு பணியிடத்திற்கான பொதுப்போட்டி முன்னுரிமை அற்றவருக்கான விருப்ப விண்ணப்பங்கள் 30.9.2020 ஆம் தேதி மாலை 5.45 மணிக்கு முன்னர் கீழ்கண்ட முகவரிக்கு வரவேற்கப்படுகின்றன. இந்த சிப்ப எழுத்தர் பணியிடத்திற்கு விண்ணப்பிப்போர் தகுதி 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும்.

மேலும் பொதுப்பிரிவினர் 30 வயதுக்குள்ளும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.சி) 32 வயதுக்குள்ளும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (எம்.பி.சி) 32 வயதுக்குள்ளும், ஆதிதிராவிடர் வகுப்பினர் (எஸ்.சி) 35 வயதுக்குள்ளும், ஆதிதிராவிடர் பழங்குடியினர் (எஸ்.டி) 35 வயதுக்குள்ளும், ஆதிதிராவிடர் அருந்ததியினர் 35 வயதுக்குள்ளும் இருத்தல் வேண்டும். சம்பளம் $7^{th}$ Pay - Level -2, Cell -1, Rs.15,900 (Schedule-III) (Rs.15,900 - 50,400) மற்றும் இதரப்படிகள் ஆகும்.

விருப்பமுள்ளவர்கள் சிறைக்கண்காணிப்பாளர், பார்ஸ்டல்பள்ளி மற்றும் மாவட்டச்சிறை, புதுக்கோட்டை -622001 என்ற முகவரிக்கு விண்ணப்பம் அனுப்பிட வேண்டும். மேலும் விபரங்களுக்கு 04322-222220 என்ற தொலைபேசி எண்ணை

தொடர்பு கொள்ளலாம். குறிப்பாக 30.9.2020 ஆம் தேதி மாலை 5.45 மணிக்கு முன்னர் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதற்கு பிறகு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இவ்வாறு புதுக்கோட்டை மாவட்டச்சிறை கண்காணிப்பாளர் திருமதி.வி.ருக்மணிபிரியதர்ஷினி அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**